**பிடபெத்தர பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 09 (திருத்திய) ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து பிடபெத்தர பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 940,000 தொகைக்கான காணியின் பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) ஏல விற்பனை மூலம் விற்பனை செய்திருந்த ரூபா 22,312 தொகை பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கிரயத்தை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்த மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 7,341,499 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீதியிலுள்ள மோட்டார் வாகன தரிப்பிட நிர்மா வேலைக் கிரயம் ரூபா 230,100 தொகை மிகையாகவும் ஆயுள்வேத கட்டிடத்தின் கிரயம் ரூபா 81,524 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(உ) சேதனப் பசளை செயற்களம் நிர்மாணிக்கப்படாமையால் பிலிசரு செயற்திட்டத்திற்கு திருப்பி அனுப்பியிருந்த ரூபா 1,225,940 இற்கான தொகை மூலதனச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்புடைய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளின் பிரகாரம் மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 51,718,700 இற்கான ஒப்பற்ற தன்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 44,127,493 தொகைக்கான மூலதன உதவி கடன்பட்டோர் மீதியல் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 26,292,259 இற்கான மீதிகளும் அடங்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 41,352,847 தொகைக்கான செலவுக் கடன்கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 22,284,694 இற்கான மீதிகள் அடங்கியுள்ளன.

(இ) முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் பெறுமதி கூட்டிய வரி கணக்கிலுள்ள ரூபா 624,939 இற்கான மீதியை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) வீட்டுக்கு வீடு ஊருக்கு ஊர் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள 10 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 7,086,710 இற்கான கொடுப்பனவுகளை முடிவாக்கியிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 46,619,524 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் கூட்டுத்தொகை 70,438,349 தொகைக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் தொடர்பாக நாளது வரையாக்கிய மற்றும் முறைப்படி பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் உருத்துறுதியும், கூட்டுத்தொகை ரூபா 41,352,147 தொகைக்கான மூலதன உதவி கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீது தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட மற்றும் முறைப்படி பேணப்பட்ட கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் பதிவேடுகள் மற்றும் காலப்பகுப்பாய்வு ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாண 571 இன் படி03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 893,450 இற்கான செலுத்த வேண்டிய தடுத்து வைத்தல் வைப்பு 80 மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,368,175 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,205,713 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 837,538 இற்கான வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 87 சதவீதம் அளவில் மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து கடந்த மூன்று வருடங்களிலும் கணிசமான அளவு பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுக் அதிகரித்திருந்ததுடன் வருமான உதவிகள் கிடைக்காவிடின் சபைக்கு சுயமாக உருவாக்கிய மீண்டுவரும் செலவுகளை மேவகை செய்வதற்காக இயலாத ஒரு நிலைமையினைக் காட்டியது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரம் சராசரி நிலைமை காட்டிய போதிலும் கடன்பட்டோர் மீதியில் 03 வருட காலத்தினை மிகைத்துள்ள அறவிடப்படாது காணப்பட்டது ரூபா 26,292,259 இற்கான மீதிகள் காணப்பட்டமையால் அவ் விகிதாரசாரத்தின் பிரகாரம் திரவத்தன்மை நிலைமை காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

### 2.4.2 வீத வரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

**(அ) வீதவரி**

2010 பெப்ரவரி 28 திகதிய 1824 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 கிராம சேவகர் பிரிவுகளில் முன்னேற்றப்பட்ட பிரதேசம் என வெளியிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை வீதவரி சேகரிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 229,533 தொகையாகக் காணப்பட்டதுடன் ரூபா 32,091 தொகையான ஆண்டிற்கான சிட்டையிட்டவையுடன் ரூபா 261,624 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 3,477 ஆகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 258,147 தொகையாகும்.

### 2.4.3 வாடகை

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 1,403,418 தொகையாகக் காணப்பட்டதுடன் ரூபா 4,797,245 தொகைக்கான ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டதுடன் ரூபா 6,200,663 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,997,219 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 1,203,444 ஆகும். நிலுவை தொகையினை அறவீடு செய்வதற்காக பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,715,566 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 10,978,811 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 19,015,491 தொகையான ஏனைய ஏற்பாடுகளின் கீழ் சந்தைகள், கடைகள் நிர்மாணிக்கும் இரண்டு நிர்மாண வேலைகள் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய நாட்கள் மிகைத்து இரண்டு வருடங்களை விட மிகையான காலம் கடந்துள்ள போதிலும் 2017 மே 25 திகதி வரை நிர்மாண வேலை பூர்த்தி செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையினால் 2016 ஆண்டிற்கான மதிப்பீடு மூலதனச் செலவு ரூபா 53,675,000 தொகையாக இருந்த போதிலும் உள்ளவாறான மூலதனச் செலவு ரூபா 2,187,893 தொகையாகக் காணப்பட்டமையால் மூலதன வேலைகளை மேற்கொள்ளும் முன்னேற்றம் 4 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

### 3.2.1 மனித வள முகாமைத்துவம்

மூன்றாம் தர மற்றும் ஆரம்ப தர மட்டத்திலுள்ள 11 பதவிகளில் மிகையான பதவியணியினை முறைப்படுத்துவதற்காகவும் அல்லது இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்படும் 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2.2 வழக்கு கட்டணம் செலுத்துதல்

சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 02 வழக்குகளுக்காக 2015 ஆண்டு முதல் 33 தவணைகளுக்காக ஒரே சட்டவரைஞருக்கு ரூபா 1,394,500 தொகை ஒன்று செலுத்தியிருந்ததுடன் சட்டவரைஞர் கட்டணம் செலுத்துதல் நடைமுறையொன்று காணப்படவில்லை.

### 3.2.3 ஆதனக் கடன் வட்டி

சபையின் உத்தியோகத்தர்கள் பெற்றிருந்த ஆதனக் கடனுக்காக வங்கி வட்டியின் ரூபா 234,515 தொகையான வித்தியாசம் உள்ளூராட்சி ஆணையாளரினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 2016 ஆண்டின் போது 06 செயற்திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,050,000 இற்கான ஏற்பாடுகளில் வழங்கியிருந்த ரூபா 1,000,000 தொகையான முற்பணத்தை பயன்படுத்தி ரூபா 600,000 தொகைக்கான 02 செயற்திட்டங்கள் மாத்திரம் செய்யப்பட்டிருந்தது. ரூபா 1,450,000 தொகை

மீதிக்கான 04 செயற்திட்டங்கள் செய்யப்படாமையால் உரிய ஏற்பாடுகள் கிடைத்திருக்கவில்லை.

**3.4 செயற்திட்ட தாமதம்**

தென் மாகாண அபிவிருத்தித் திட்டம் - மந்திரி ஏற்பாடுகளின் கீழ் 2013 ஆண்டு முதல் 2016 நிகழ்ச்சித் திட்டத்திற்காக சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 210,000 தொகைக்கான 05 நிர்மாண வேலைகள் 2017 மே 31 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை.

**3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாளாந்தம் சேகரிக்கப்படும் உக்கக் கூடிய குப்பை தொகையினை தனியார் உர உற்பத்தியாளர் 6 பேருக்கு இலவசமாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2015 ஏப்ரல் 22 திகதி ரூபா 83,984 இற்கான அளவைக் கட்டணமாக செலுத்தி 8.4266 ஹெக்டயர் காணி ஒன்று பெற்றிருந்த போதிலும் அக்காணியை குப்பைகளை அகற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சேதனப் பசளை செயற்தளம் நிர்மாணிக்கப்படாமையால் பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த ரூபா 1,225,940 தொகைக்காக திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக பாதீட்டின் ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. வரையறையை மிகைத்த செலவு விடயம் ஒன்றின் கீழ் ரூபா 878,591 தொகைக்கான செலவு மேற்கொள்ளலும் 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,118,254 தொகைக்கான சேமிப்பும் 03 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,409,345 தொகையும் காணப்பட்டமையாலாகும்.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சபையினால் நியமிக்கப்பட்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 421,185 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்**

2009 ஜுன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்